குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.40/2009

அ.சா.3

2024–ம் ஆண்டு அக்டோபர் 24–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி | ஜாதி | |
| தந்தை பெயர் | சாமிநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.31 மணி,

Accused A1. Balakrishnan, A5.Subramani, A6.Rathinavel, A7.Sivaraj @ Yuvaraj present. A2.Govindammal Absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.K.Sivakumar present for Advocate Mr.R.Dhanasekar for present accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பன்னப்பட்டியில் குடியிருந்து ஜவுளி கடை வைத்துள்ளேன். அ.சா.1 எனது கணவர். 18.05.2006 ஆம் தேதி பன்னப்பட்டியில் உள்ள எங்கள் ஜவுளிக் கடையை இரவு 09.00 மணிக்கு பூட்டிவிட்டு, வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் 19.05.2006 ம் தேதி காலை 06.00 மணிக்கு நான், கடைக்கு சென்று பார்த்தபோது, எனது கடையின் சட்டரை கம்பியால் நெம்பி, திறந்து, கடையில் வைக்கப்பட்டிருந்த புதிய புடவை, லுங்கி, வேட்டி, சட்டை மற்றும் சிறுவர் ரெடிமேட் துணிகள் ஆகியவற்றை யாரோ எடுத்துச்சென்று விட்டார்கள். காணாமல் போன ஜவுளிப் பொருட்களின் மதிப்பு ரூ.1,00,000–த்திற்கு மேல் இருக்கும்.

2. இதுசம்மந்தமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எங்களுக்கு சொந்தமான காணாமல் போன ஜவுளிப் பொருட்கள் தற்போது வரை கிடைக்கவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. எங்களது வீடு துணிக்கடைக்கு அருகில், அதனையொட்டி உள்ளது. எதிரிகள் ஓட்டை உடைத்து இறங்கியதாக கூறியுள்ளநிலையில், ஓடு உடைக்கும் சத்தம் எங்களுக்கு கேட்கவில்லை என்றால், அன்றைய தினம் மழை பெய்து கொண்டிருந்ததால் சத்தம் கேட்கவில்லை. எனது வீட்டிற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு பல வீடுகள் உள்ளது என்றால், சம்பவத்தின்போது வேறு எந்த வீடும் இல்லை. நான், எனது கடையில் உள்ள கதவை நெம்பியிருந்ததை பார்த்தாக கூறியுள்ள நிலையில், அப்போது காலை 06.00 மணி இருக்கும். கடையில் இருந்த துணி அனைத்தையும் எடுத்துச்சென்றுவிட்டனர் என்றால் சரி.

3. கடையில் உள்ள கல்லாப்பெட்டியில் பணம் எதுவும் வைத்திருந்தோமா என்றால், வைத்திருந்தார் , தற்போது எனக்கு நியாபகம் இல்லை. எனது கடையில் இருந்த புடவைகள், வேஷ்டி, லுங்கி, சின்ன குழந்தைகளின் ரெடிமேட் ஆடைகள் ஆகியவை திருடுபோயிருந்தது. மேற்படி, துணி வகைகளின் எண்ணிக்கை எனக்கு தெரியவில்லை. போலிசார் விசாரணையில் எங்கள் கடையில் இருந்து திருடுபோன துணிகளின் மதிப்பு ரூ.1,00,000/-ம் என கூறியிருந்தேன். எதிரிகள் எங்கள் கடையில் இருந்து துணிகளை திருடவில்லை என்றால், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. போலிசார் எங்களை விசாரித்தபோது, சுமார் 20-30 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரி. அவர்கள் அனைவரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரி.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.50 மணி,

ஒம்/-ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.